சாட்சிய வாக்கு மூலம்

(அத்தியாயம் 25 பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா)

1989 ஆண்டு இயற்றப்பட்ட பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர்

( வன்கொடுமை தடுப்பு ) சட்டத்தின் கீழான

வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம் ,

திருவாரூர் - 610 001

தேதி: 05.01.2026

| | | |
|---|---|---|
| சிறப்பு அமர்வு வழக்கு எண். | : | 126/2025 |
| சாட்சியின் வரிசை எண். | : | அ.சா-5 |
| சாட்சியின் பெயர் | : | மாரிமுத்து |
| தந்தை பெயர் | : | சபாபதி |
| கிராமம் | : | பைங்காநாடு |
| தாலுக்கா | : | மன்னார்குடி |
| தொழில் | : | விவசாயம் |
| வயது | : | 45 |

2026 ம் ஆண்டு ஜனவரி மாதம் 05 ஆம் நாள் ஆகிய இன்று இந்த நீதிமன்றத்தில் உதவியாளராக பணிபுரியும் திரு. G. சுப்பையன் அவர்களால் இந்த சாட்சிக்கு 1969 ம் ஆண்டு உறுதிமொழி சட்டத்தின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் சாட்சிய வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

எதிரி ஆஜர். அரசு வழக்கறிஞர் ஆஜர். எதிரி வழக்கறிஞர் ஆஜரில்லை.

<u>முதல் விசாரணை</u>

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்து வருகிறேன். நான் இந்து கள்ளர் வகுப்பை சேர்ந்தவன்

ஆவேன். அ.சா-1 கஜேந்திரன் என்பவரை தெரியாது. ஆஜர் எதிரியை தெரியும். ஆஜர் எதிரி எனது நண்பர் ஆவார். வழக்கு விவரம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை.

(இந்த சாட்சி அரசு தரப்பு வழக்கினை அனுசரித்து சாட்சியம் அளிக்கவில்லை என்பதால் இந்த சாட்சி குறுக்கு விசாரணையில் கேள்விகள் கேட்பது போல் இந்த சாட்சியிடம் கேள்விகள் கேட்க அனுமதிக்கவேண்டுமென அரசு தரப்பு வழக்கறிஞர் வாய்மொழியாக கேட்டுகொண்டதன் அடிப்படையில் அனுமதி வழங்கப்படுகிறது.)

**அரசு தரப்பு விசாரணை தொடர்ச்சி**

போலீசார் என்னை விசாரணை செய்தார்கள் என்றும், அப்போது போலீசாரிடம் கடந்த 01.06.2025 ஆம் தேதி மாலை 6.00 மணியளவில் எனது முதலாளி கலைச்செல்வன் திருமக்கோட்டை சென்று வருவதாக என்னிடம் சொல்லிவிட்டு சென்றுவிட்டார் என்றும், நான் பாரில் வேலை செய்தபோது இரவு சுமார் 8.00 மணியளவில் எங்கள் ஊர் காலணி தெருவை சேர்ந்த கஜேந்திரன் என்பவர் மது கடைக்கு ஆட்கள் வந்து போகும் வழியில் சைக்கிளை நிறுத்தியிருந்ததர்காகவும், அதை பார்த்த எங்கள் ஊர் மேலத்தெருவை சேர்ந்த பன்னீர் மகன் பிரபாகர் என்பவர் கஜேந்திரனிடம் என்னடா வழியில் சைக்கிளை நிறுத்தியிருக்க என்று கேட்டு இருவருகும் வாக்குவாதம் ஏற்பட்ட சத்தம் கேட்டு நான் அங்கு சென்று பார்க்கும் போது பிரபாகர் கஜேந்திரனை பார்த்து பற தேவடியா, குச்சிகாரி மவனே ஒயின்சாப்ல் நான் குடிக்கிர இடத்தில் உனக்கு என்னடா வேலை என்றும், திட்டி கஜேந்திரன் இடுப்பில் உதைத்து கீழே தள்ளிவிட்டார் என்றும், உடனே கஜேந்திரன் கீழே விழுந்ததை பார்த்து ரோட்டு பக்கம் இருந்து வந்த நான்கு, ஐந்து நபர்கள் இருவரையும் விலக்கி விட்டார்கள் என்றும், அவர்கள் யார் என்ற விபரம் எனக்கு தெரியாது என்றும், மது குடிக்க வந்திருக்காலம் என நான் நினைத்தேன் என்றும், பின்னர் நான் பாருக்குள் வேலை செய்ய வந்துவிட்டேன் அப்போது பிரபாகர் மற்றும்

கஜேந்திரன் இருவரும் குடிபோதையில் இருந்தார்கள் என்றும், கஜேந்திரனை அவரது தம்பி குபேந்திரன் அழைத்து சென்றார். இரவு சுமார் 9. 00 மணியளவில் கடைக்கு வந்த எனது பார் ஓனர் கலைச்செல்வனிடம் மேற்கண்ட விபரத்தை சொன்னேன் என்றும், தற்போது எதிரி எனக்கு தெரிந்தவர் என்பதால் உண்மையை மறைத்து நீதிமன்றத்தில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>: இல்லை.

சாட்சி சொல்ல சொல்ல என் உத்தரவுப்படி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு பின் சாட்சியிடம் மேற்படி வாக்குமூலம் படித்துக் காண்பித்த போது சாட்சி சரியென்று என் முன்பாக கையொப்பம்செய்தார்.

VADIVEL M

Digitally signed by VADIVEL M
Date: 2026.01.05 17:45:54 +0530

அமர்வு நீதிபதி,
எஸ்.சி /எஸ்.டி (வன்கொடுமை தடுப்பு )
வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு
நீதிமன்றம், திருவாரூர்.